வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

உ
சிவமயம்

# இந்து சாதனம்
# HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு

பிரதி விலை சதம் 20

ஆரம்பம்: விரோதி ஸு (1889) ஆவணிமீ 28-ம் உ. அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 35

புத்- அஅ] யாழ்ப்பாணம்- நள ஸு மாசி மீ எ-ட வெள்ளிக்கிழமை (18-2-1977) [இல: சகூ


# இடபத்தில்- வியாழன் இனஉரிமைஎழ இடங் கொடுப்பானோ...?

## தமிழ் அகத்துக்கு இராசி எது

கோள்களிலே குருவுக்குப் பெரும் பதவியுண்டு? அரசனாகவும் அமைச்சனாகவும் நல்லவற்றை ஆக்கும் பணியே வியாழனுக்குண்டு; குழந்தை பிறந்ததும் குடிக்கு அரசனும் அரசியும் சோதிடக் கலைஞரிடம் ஆவலுடன் முதற் கேட்பது குரு பகவான் நல்ல இடத்திற் குடியமர்ந்திருக்கிறாரா? என்பதையே. ஏனைய கிரகங்கள் பகையானாலும் அரசன் பெருமையானால் எல்லாம் சரியாய்விடும் என்பது பொதுவான கொள்கை. இதனை அறிந்தவர்கள் அறிவார்கள்.

இன்று வியாழன் மேடத்தை விட்டு இடபத்துக்கு ஏகுகின்றான், இந்த இடப் பெயர்ச்சியை எடுத்துச் சோதிடஞ் சொல்லுவோர் ஒவ்வொரு இராசிக்கும் என்ன பலன் என்று ஆராய்ந்தவண்ணமாக இருக்கின்றனர்.

தமிழ் இனத்துக்கு இராசி எது? என்று யார் தான் சொல்ல முடியும்? அல்லது இராசி விபரீதமானாலும் கோள் கோபங் கொண்டாலும் தமிழ் இனம் தன் இனம் மாறாது. மழைக் கால் இருட்டானாலும் கொம்

— "சிவா" —

பிழக்கப் பாயாது! துன்பத்தைத் துடைக்கவும் இன்பத்தை அமைக்கவும் இவ் வினைத்துக்குப் போதிய பொறுமையுண்டு,

வேயுறு தோளிபங்கன்
விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை
முடிமேலணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய்
புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல
அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

எனவே, வியாழன் மாற்றத்தால் அரச வட்டாரம்

[வளர்ச்சி 2 ம் பக்கம்]

## திருமறைக் காட்டுத் திருத் தலத்திற் பெருந் திருவிழா

திரு. வே. சபாபதிப்பிள்ளை, கரவெட்டி
(''அறப்பணிக் காவலர்'' நல்லை ஆதீனம்)

திருமறைக்காடென்னும் வேதாரணிய திருத் தலத்தில் 15-2-77 இல் [மாசி 4 ஆம் நாள்) திருவிழா ஆரம்பமாகி நடைபெறுகிறது. 5-3-77 இல் (மாசி 22-ஆம் நாள்) மாசி மக தீர்த்தோற்சவம் கண்கொளாக் காட்சியாக நிறைவுறும்.

திருமறைக்காடு அப்பரால் திருமறைக் கதவம் திறக்கவும் ஞான சம்பந்தரால் திருமறைக் கதவு திறக்கவும் அடைக்கவும் பாடிய திருப்பாடல் பெற்ற திருத்தலம். அகத்திய மாமுனிவர்க்கு திருமறைக் கோலங் காட்டிய திருத்தலம் புவனி விடங்கர் வீற்றிருக்கும் சப்தவிடங்கத் தலங்களிலொன்று.

இத்தன்மைச் சிறப்பமைந்த திருமறைக்காட்டுத் திருவிழா உற்சவ காலம் மிகவும் திருவருள் பொலிந்த காலமாகும். இத் திவ்விய திருத்தலத்தின் திருவிழாக் காலத்தில் வழிபாட்டுக்காக ஈழத்துச் சைவ மக்கள் பெருந்தொகையானோர் சென்று விரதானுட்டானங்கள் அனுட்டித்து, தீர்த்த யாத்திரை நிறைவேற்றி வருவர். பிற்காலம் போக்கு வரத்துக் கெடுபிடிகளாலும் அரசுகளின் அளவுக்கு விஞ்சிய சட்ட நுணுக்கக் கொள்கைகளாலும், தொல்லைகளால் ஆமயாத்திரிகர்கள் மனமுடைந்தவராய்த் தலயாத்திரையைக்கூடக் கைவிட்டு விட்டனர்! சிலர் இங்கிருந்தே விரதமனுட்டிப்பர்.

திருமறைக் காட்டுப் பெருமானைப் போற்ற வேண்டிய இந்த நாளில் அவரை மனமொழி மெய்களால் வழிபாடு செய்வோமாக. தல பதிகத்தைப் பாராயணம் பண்ணிப் புனிதராவோமாக. வேத நெறி தழைத்தோங்குக; மிகு சைவத் துறை விளங்குக. —

### கந்தபுராண சபை

கந்தபுராணம் சம்பந்தமான பல சிறப்பு நிகழ்ச்சிகளை அகில இலங்கை ரீதியாக மாதந்தோறும் நடாத்த கந்தபுராண சபை முன்வந்திருக்கிறது. சபையினர் கச்சியப்பர் திருநாளை 27-2-77 ஞாயிறன்று யாழ். கொட்டடி ஸ்ரீ பால ஞான வைரவ சுவாமி கோவிலில் கொண்டாட விருக்கின்றனர். விசேடபூசை, புராண படனம், கச்சியப்பர்மீது கவிதாஞ்சலி. உரையாஞ்சலி, கந்தபுராண பணி செய்தோர் மீது பாவாரர், 'நாவலர்க்கு முன்னும் பின்னும் - கந்தபுராணம்' எனும் ஆய்வரங்கு ஆதியாம் நிகழ்ச்சிகள் அத் திருநாளில் இடம்பெறும்.

## தெய்வீக நெறியிற் சிறந்த தொண்டு

### மலேசியாவிற் சைவஉணர்ச்சிக்கு வழி காட்டி

பட்டுமலையிலுள்ள குன்றக் குமரனைக்கண்டு கருணைப் பெருமிதத்தில் அடிவாரம் திரும்பும் அடியார்கள் ஆங்குள்ள நவமான கண் காட்சி நிலையத்தைத் தரிசித்து மேலும் மகிழ்ச்சியடைந்த பின், வழிபாட்டின் இறுதியில் சண்டேசுவர வணக்கம் செய்வதுபோல அண்மையிலுள்ள தெய்விக சங்க மன்றத்தையும் அழகுற அமைந்திருக்கும் மண்டபத்தையும் குருவாக அமைந்து உபதேசஞ் செய்யும் சுவாமி பிரணவானந்தா ஆச்சிரமத்தையும் தவறாது நோக்குவது வழக்கமாகும்.

தெய்விக நெறிக் குருவாகப் பெரும் பணி ஆற்றும் சுவாமிகளின் தொண்டு ஒரு தனி மகிமையுடையது. மூப்பது நாட்கள் மலேசியாவில் இந்துசாதன ஆசிரியர் சமய நிகழ்ச்சிகளிற் கலந்து கொண்ட பொழுது தாம் சென்ற இடங்களிலெல்லாம்

(வளர்ச்சி 2 ம் பக்கம்

## திருமுறைப் பயிற்சிவகுப்பு சமயப்பிரசாரம் வளர உதவி

### சமய ஆலோசனைச்சபைச் செயலாளரின் அழைப்பு

இந்து சமயப் பணி புரியும் நிறுவனங்களுக்கு இவ் வருடம் கலாசாரத் திணைக்களம் வழங்கும் நிதியுதவி பெற விரும்பும் நிறுவனங்கள் தமது விண்ணப்பத்தை பங்குனி (10-3-77) மாதம் 10 ம் தேதிக்கு முன் அனுப்பவேண்டும். பாடசாலைநேரத்துக்குப் புறம்பான நேரத்தில் சமய பாட வகுப்பு நடத்துதல் பண்முறையில் தேவாரம் பயிற்றுதல், குரு பூசை, கதாப் பிரசங்கம், சமயச் சொற்பொழிவுகள் நடத்துதல், சமய தீட்சை ஒழுங்கு செய்தல். சைவ சமய நூல்கள். பிரசுரங்கள் வெளியிடுதல் முதலிய பணிகளுக்கு நிதியுதவி வழங்கப்படும்.

### கலாசாரத் திணைக்களம் ஆராயும்

விண்ணப்பங்கள் 35, தர்மபால மாவத்தை, கொழும்பு 7 இலுள்ள கலாசாரத் திணைக்களத்தில் பெறக்கூடிய விண்ணப்பப் படிவத்திலேயே அனுப்பப்படல் வேண்டும் எனவும் இந்து சமய விவகார ஆலோசனைச் செயலாளர் தெரிவிக்கின்றார். —

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

நளஹூ மாசி மீ எ-உ வெள்ளி

## எங்கெங்கே இருக்கின்றார்கள்? எவ்வாறு வாழ்கின்றார்கள்?

அனைத்துலகிலும் இந்துக்கள் வாழ்கின்றார்கள் என்று நாம் அடிக்கடி அறிகின்றோம். அவ்வளவில் அகமகிழ்ந்துகொள்கின்றோமேயன்றி ஆங்குள்ளவர்கள் எவ்வாறு சமய நெறிப் பயிற்சி செய்கின்றார்கள் என்பதையோ மற்று அவர்தம் தேவைகள் யாவை என்பதையோ நாம் அறிந்து ஆவன செய்ய முற்படுகின்றோமில்லை. இவ்வகையிலே புள்ளி விபரங்களைப் பூரணமாகத் தேடி அவற்றை அட்டவணைப் படுத்தி வெளியிடுதல் அத்தியாவசியகம் என்பதை நாம் கூறமிடத்து இவ்வகையிலே இந்துசமயத்தைப் பரப்புதல்தான் மோக்கம் என்று எவரும் கருதக் கூடாது. சமயத்தைப் பரப்புதல் என்ற கொள்கை சான்புடையதல்ல! சமய நெறியின் வண்ணம் மக்களை வாழ வைப்பது மரபாகும்.

சைவ சமயத்தைப் பொறுத்த வரையில் அதன் பெருமை அருட்டிப்போரின் என் கணக்கிலே என்றும் தங்கியிருக்கவில்லை. அதன் இலட்சியமே முதன்மையான தகைமையாகும்; ஆகவே உலகத்திலே பல வேறு ஊர்களிலே இந்துக்கள் வாழ்கின்றார்கள் என்பதை அறிவதோடு அவர்கள் ஆங்காங்கு எவ்வாறு சமயிகளாக நெறி நிற்கின்றார்கள் எனத் தெரிந்து கொள்வது நலலதோர் முயற்சியாகும். காரணம் இந்துக்கள் என்று பெயரளவிலே இருப்பதினும் பயனின்று. சைவ நெறியின் வழி ஒழுகுவதே பேறுடையது. இதற்காகவே சைவ நெறிப பண்பைப் பாது காக்கும் சங்கங்கள் இம் முயற்சியில் ஈடுபடுதல் ஒரு தொண்டாகும் என்று நாம் கருதுகின்றோம்.

பொதுவாக சைவம் தவிர்ந்த ஏனைய மதங்களிலும் உட் பிரிவுகள் பல வேறுள்ளன. அருட்டான முறைகளும் வித்தியாசமானவையே, ஆனல் அவ்வித மதக் குழுக்கள் தமக்கெனத் திட்டமான குறிக்கோளையுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். சைவ சமயிகளுக்குக் குறிக்கோள் வெவ்வேருக இருக்க ஒண்ணுது. இதுபற்றியே உலகம் முழுவதிலும் உள்ள இந்துக்களின் சமய வாழ்க்கை விபரங்களைப் பெற்று ஆங்காங்கு எவ்வாறு சைவ சமய நெறியை விளங்க வைக்கலாம் என்பதைப் பழம் பெரும் சைவ சபையாம் — எங்கள் சைவ பரிபாலன சபை போன்ற சங்கங்கள் ஆராய்ந்து பணியாற்றுதல் நன்று; கடமையுமாகும்.

---

### தெய்விக நெறியில்

1-ம் பக்கத்து வளர்ச்சி

சுவாமிகள் ஆசி கூறிச் சைவ நெறி விளக்க உரைகளை ஆற்றுவது வழக்கம் என்று குறிப்பிடுகின்றார்.

சுவாமிகள் தொடக்கியும் தலைமை தாங்கியும் சொற்பெருக்காற்றியும் இவ்வகையில் எவ்வகையாய் ஒன்றிலோ பலவற்றிலோ பங்குகொள்ளாத சமய சமூக நிகழ்ச்சிகள் மலேசியாவில் இல்லை என்றே கூறலாம்.

மலேசிய இந்துசங்கத்தின் எழுச்சிக்கு சுவாமி அவர்கள் ஏதுவாயிருக்கின்

### இடபத்தில் - வியாழன்

1- ஆம் பக்கத்து வளர்ச்சி

களில் ஆகிய எண்ண மாற்றங்கள் தமிழ் இனத்தைப் பொறுத்தவரையிலே சர்வ சாதாரணமானவை; நீதியையும் நெறியையும் நேர்மையையும் கடைப்

ரூர் என்றால் அது மெய்யுரையே யாகும்.

கணப் பொழுதையும் கடவுட் பணியிலே கடமையாகக் கழிக்கும் சுவாமி அவர்களின் தொண்டு பெரும் பயன் விளைவிக்கின்றது என்பது இந்துசாதன ஆசிரியரின் அ[illegible] குறிப்பாகும்.

---

# இந்து நாகரிகத் துறைக்கு ஈழம் கொடுத்திருக்கும் இடம்

## இந்தியப் பேராசிரியரின் பாராட்டு

"ஈழநாடு சமயத்துறையில் தமிழகத்தை விட ஒருபடி முன்னேறி இருப்பதைக் காண்கின்றேன். இங்குள்ள சிறபிள்ளைகள் முதல் முதியோர் வரை பலரும் சைவச்சூழலில் வளருகின்றார்கள். அவர்கள் உண்மையில் சிவசம்பந்தமுடையவர்கள்" இவ்வாறு சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளி தமிழ்ப்-பேராசிரியர் வித்துவான் புண்ணியகோடி அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாக இந்து நாகரிக-வகுப்பு மாணவர் மத்தியில் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். அவர் மேலும் குறிப்பிட்டதாவது தாய் நாட்டில் சமயக்கல்வி கட்டாயம் இல்லை இங்கு அது கட்டாய பாடமாக இருப்பதைக் காண மகிழ்ச்சியாக இருக்கின்றது. மேலும் இந்து நாகரிகம் கற்பதற்கு ஒரு துறையே இருப்பது போற்றுதற்குரியது. அத்தகைய வாய்ப்பு தமிழகத்தில் இன்னும் ஏற்படவில்லை.

சிவனின் தொன்மை காலத்தில் அடக்க முடியாதது. 'நூறுகோடி பிரமர்கள் நுங்கினர். ஆறு கோடி நாராயணர் அங்ஙனே, ஏறு கங்கை மணல் இந்திரர் ஈறிலாதவன் ஈசன் ஒருவனே என்ற அப்பர் பாடல் சிவபெருமானின் தொன்மையைக் கூறுகின்றது.

அன்பும் சிவமும் ஒன்றே தேவாரத்தால் இறைவனைத் துதித்தவர்கள் நமது சமயகுரவர்கள், தேவாரங்கள் இறைவனைப் புகழ்வது மட்டுமேல்லாமல் இயற்கை வர்ணனைகளையும் சமுதாயதில் செய்யவேண்டிய பணிகள் பற்றியும் கூறும். சமயகுரவர்கள் தாம்பெற்ற அனுபவங்களை எடுத்துரைத்துச் சென்றுள்ளார்கள் மனிதர் அன்பே வடி

வான இறைவனை வணங்குவர்,

ஒரு அரசன் தனது அவைக்களப் புலவரிடம் மூன்றுகேள்விகளைக் கேட்டுப் பதில் தருமாறு வேண்டினான். அவை: 1. கடவுள் எங்கேஇருக்கின்றார்? 2. கடவுள் என்ன திக்கைப் பார்த்துக்கொண்டிருக்கின்றார்? 3. கடவுள் என்ன செய்கின்றார்? புலவர் விடைகாண முயன்று முகவாட்டமடைந்திருந்த பொழுது அவரது மழலைச் செல்வி அவரது வாட்டத்தைக் கேட்டு அறிந்து அரசனிடம் தானே அக்கேள்விகட்குப் பதில் சொல்வதாகச் சென்றது.

முதற் கேள்விக்கு விடையாக அரசனைப் பசுப்பால் கொண்டு வரச் சொல்லி அப்பாலுக்குள் நெய் இருக்கின்றதா? என்று அரசனைக் கேட்டது. அரசன் 'ஆம்' என்றபொழுது அது காட்டும்படி கேட்டது, அரசன் திகைக்குற்றான, குழந்தை சொல்கின்றது உறவுக்கோல் நட்டு உணர்வுக்கயிற்றினால் முறுக வாங்கிக்கடைய பாலில் நெய் முன்னிற்கும். இறைவனைக் காண்பதற்கும் பக்குவம் வேண்டும்.

இரண்டாவது கேள்விக்கு விடையாக ஒரு மெழுகுவர்த்தியைக் கொண்டுவரும்படி சொல்லி இதைக் கொழுத்தி, இம் மெழுகு திரி எரிவது எந்தத் திக்கைப் பார்த்து? என்று கேட்டது. அரசனுல் பதில்கூற முடியவில்லை மெழுகுதிரியைப் போல இறைவன் எல்லாத் திசைகளையும் பார்த்துக்கொண்டிருக்கின்றான்.

மூன்ருவது கேள்விக்கு விடையாக இறைவன் கோபுரத்தைக் குப்பையாகவும் குப்பையைக் கோபுரமாகவும் ஆக்கிக்கொண்டிருக்கின்றான். அதுபோல உன்னையும் அரசனுகப் படைத்திருக்கின்றார் எனக் கூறி அரசனைச் சிந்திக்க வைத்தது,

பஞ்ச பாண்டவர்களிலே சகாதேவன் செய்தது போல் இறைவனை அன்புக கயிற்றால் கட்ட வேண்டும். அப்பொழுதுதான் பாரதப் போர் நடைபெறாது தடுக்கலாம். இறைவன் அப்

பர் பாடல் கூறுவதுபோல் நிற்பன்.

'விறகில் தீயினன்
பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன்
மாமணிச் சோதியான்
உறவுக் கோல்நட்
டுணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக்
கடைய முன் நிற்குமே,

இவ்வாறு இறைவன் பெருமைகளை மிக அழகாக எடுத்துரைத்தார்கள்.

வை. இரகுநாத முதலியார்
(அபிமான நிருபர்)

---

பிடிக்கும் இனம் கடவுள் தலைமை தாங்கிய சகைப் பலகைப் புகழ் படைத்த பெருஇனம் திங்கட்கிழமை நடத்தும் கருத்து அரங்கின் பயனை வியாழன் பண்படுத்துமா? என்று விழித்திருந்து பார்ப்போம்.

### நினைவு விழாவும் புத்தக வெளியீடும்

20-2-77 ஞாயிற்றுக்கிழமை வண்ணை; வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் (முன்னை அதிபர்) திரு. ச. அம்பிகைபாகன் தலைமையில் ஸ்ரீ இராமகிருஷ்ண ஜயந்தி விழா மாலை 5 மணி முதல் கொண்டாடப் படும். சுவாமி விவேகானந்தர் பற்றி திரு. [illegible] (கவிதை) சிவநெறிப்புரவலர்

சமாதான நீதிபதி திரு. க. கனகராசா அவர்கள் அன்பளிப்பாக வெளியிட்டு வைப்பார். திரு. க. சு. குலரத்தினம் அவர்கள் ஆய்வுரை வழங்குவர். திருப்பூங்குடி வி. வி. கே. ஆறுமுகம் குழுவினர் பாடல்களை அரங்கேற்றி வைப்பார். புத்தகப் அன்பளிப்பு நிதி சங்கக் கட்டட அமைப்புக்குப் பயன்படுத்தப் படும்.

---

### நூலரங்கம்

#### நித்திய பாராயணத் தோத்திரங்கள்

எத்தனை வெளியீடுகள் இருப்பினும் திருமுறை என்ற வற்றாத நீர்நிலை வளம் வழங்கிய வண்ணமே இருக்கும்,

இலவசப் பிரசுரமாகத் திருமுறை அமுதத்தில் ஒரு பகுதி அன்பளிப்பாக வழங்குவது சைவ சமயிகள் கட்டாயமாகச் செய்யவேண்டியதோர் கடமையாகும்;

இந்த வகையிலே யாழ். கொட்டடி ஸ்ரீ பாலஞானவைரவர் கோவிலிலே சிவராத்திரி வேளையில் உபயோகத்துக்காக விசேடமாக 'நித்திய பாராயணத் தோத்திரங்கள்' என்ற தொகுப்பை சைவப் புலவர் திரு. வே. கந்தசாமி அவர்கள் உதவியுள்ளனர் விபுலானந்த அச்சகத்தார் அதனை அழகாக அமைத்து அச்சேற்றியிருக்கின்றனர்;

பெருந் திருவிழாக் காலத்தில் ஓதப்பெறவேண்டியவற்றை முறையாக இத் தொகுப்பில் சேர்த்திருப்பது குறிப்பிடத்தக்கது.

---

உ
சிவமயம்
சைவ சமய பாடப்

## பரீட்சை

6-11-1977 - இல்
நிகழ ஏற்பாடு

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையார் பாடசாலை மாணவர்களுக்காக ஆண்டுதோறும் அகில இலங்கை ரீதியில் நடாத்தும் சைவ சமய பாடப் பரீட்சை இவ் வாண்டு 6-11-77 ஞாயிற்றுக் கிழமை நடைபெறும்.

பாடவிதானம் பாடசாலைகளுக்கு இவ் வாரம் அனுப்பி வைக்கப்படும்,

சி. சிவரத்தினம்,
பரீட்சைக் காரியதரிசி
சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம். 17-2-77

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயமும் வாழ்க்கையும்

[ திரு. ந. சோமசுந்தரம் இருபாலை ]

( முன்வளர்ச்சி — 6 )

அன்பென்பது ஒரு சத்துவ குணமாகும். அன்பு மேலிட்டு இருக்கும் ஒருவரிடம் நல்ல சிந்தனைகளும்; நல்ல சொற்களும், நல்ல செயல்களுமே உண்டாகும்: தீயசிந்தனைகளும் தீயசொற்களும், தீய செயல்களும் அவரிடத்தில் ஒரு போதும் உண்டாகா. இது உண்மை, இவ்விதம் நல்லன எல்லாவற்றையும் தம்முள் அடக்கி நிற்பது என்ன காரணத்தினல்? அன்பு என்பது சுயநல மறப்பிலும், பிறநல விருப்பிலும் எழுகின்ற தொன்று, வேறுவிதமாகச் சொன்னல் தியாகத்தின் மறு உருவே அன்பாரும், இதனலேதான் இறைவனும்; அன்பும் ஒன்றென்று சொல்ல முடிகின்றது. ஏனெனில் இறைவனும் தியாகமே உருவானவன். இந்த உலகமும் உலகத்திலுள்ள அத்தனையும் அவனுடையதே ஆயினும் அவன் அதை உயிர்களுக்கே அர்ப்பணித்து அவற்றின் நன்மையை நாடி இரவும் பகலும் செயல் புரிகின்றன், இவ்வாறன அன்புக்குத் தமது உள்ளத்தை இருப்பிடமாகக் கொடுத்தவருக்குக் குறையும் உண்டோ? இல்லை;

உள்ளத்தில் அன்பு உள்ளவர் பிறர் கஷ்டப்படுவதைக் கண்டு இரக்கம்கொள்கின்றனர் உதாரணமாக ஒருவர் உண்ண உணவின்றிக் கஷ்டப்படுகின்றார் என்றல் தம்மிடத்தில் உள்ளவற்றைக் கொடுத்து அவரது பசியை மாற்றுகின்றனர்,

கொலை, களவு, கள்ளுண்ணல் வருடல் முதலாம் சீர்கேடான பண்புகள் நிறைந்து அதனல் சமுதாயம் அல்லல் உறுகின்ற தென்பதைக் கண்ணுறுகின்ற அன்புள்ளவர் அவ்வாறன பண்புகளை மக்களிடத்தில் இருந்து நீக்குவதற்கான வழிவகைகளை ஆய்ந்து மேற்கொள்ளுகின்றனர். இதனல் அவர்கள் இறைவனேடு ஒத்த தன்மையைப் பெறுகின்றனர், ஏனெனில் இறைவனும் தீயவற்றை உயிர்கள் விலக்க நல்லவற்றை நாடி உய்யும்வண்ணம் இரவும் பகலும் உழைக்கின்றன். அவன் இவ்வாறன தூயஉள்ளம் நிறைந்த கருணை நிறைந்த மனிதரைக் கருவியாகக் கொண்டு செயல் ஆற்றுகின்றன். இதனல் அவ்விதமான மனிதர் தெய்வப் பெற்றி பெறுகின்றனர், இவ்விதமான அன்பைப் பெறுவதற்கு நாம் என்னபணம் பொருள் செலவு செய்யவேண்டுமா? அல்லது வேறு விதமான உடற் கஷ்டம உள்ளக் கஷ்டம் அடைய வேண்டுமா? ஒன்றும் தேவை இல்லை! இயல்பாக உள்ளத்தில் ஊற்றெடுக்கும் இவ்வின்பம் சுயநலம் என்கின்ற தடையைப் போட்டு அடையாமல் தன்வழிப் பாய விட வேண்டுவதுதான் நாம் செய்ய வேண்டுவதெல்லாம்.

எவன் ஒருவன் தனக்குத் தனக்கென்று எதையும் வையாமல் பிறர்க்குப் பிறர்க்கென்று எல்லாவற்றையும் கொடுக்கின்றனே அவனிடத்தில் இறைவிரைந்தோடி வருவான், ஏனெனில் தன்னியல்பான தியாகத்தை இவன் கைக்கொண்டு விட்டானே என்கின்ற காரணத்தால் எனக.

எவனெருவன் அன்பிற்கு அடிமையாகிவிட்டானே அவனுக்கு இந்த உலகத்து உயிர்கள் எல்லாம் அடிமையாகிவிடும. அவனை வசமாகிவிடும் அவனது உள்ளத்தில் உவகை எந்நேரமும் பெருக்கெடுத்தோடும், அவனது முகத்தில் சாந்தம் தவழ்கொண்டுவிடும், அவனது சொல்லில் இனிமை தாண்டவமாடும். அன்பிற்கு இவ்வாறன இயல்புகள் எல்லாம் அமைந்துள்ளவற்றை அறிந்தும் ஏன் மக்கள் அதை மறந்து திரிகின்றனரோ? யாம் அறியோம். (வளரும்)

## அஞ்சல் நிலையம் அங்கேயுமாம் !

வியப்பு நிகழ்ச்சி ஒன்றுவது இல்லாத வேளையில்லை !

உருசிய விண்வெளி வீரர்கள் வான வெளியில் ஒரு அஞ்சல நிலையம் அமைத்தார்களாம?

விண்ணவருடன் எண்ணியவுடன் தொலைபேசித் தொடர்பு கொள்ள இந்த நிலையம் உதவுமேயானல், இராமாயண பாரத காலதது அதிசய நிகழ்ச்சிகள் யாவும் நடந்திருக்க வேண்டியவை என்ற கருத்து வெளிப்படும்.

அங்கே அஞ்சல் நிலையம் இனி எதற்தும ' அஞ்சல் வேண்டாம ... ... ...!

## நன்று மிக நன்று!



பக்தர் : 'செல்வி' என்று திருமணமாகாத பெண்பிள்ளைகளையும் 'சௌபாக்கியவதி' என்று திருமணமான பெண்களையும் அழைக்ககூடாது; என்று மகாராஷ்டிராவில், பெண்கள் போர்க்கொடி உயர்த்தியிருக்கிருர்களாம்! பம்பாயில் 'பூன்' என்ற இடத்தில் இருநாட்கள் நடைபெற்ற மாநாட்டில் இக்குரல் கிளப்பப்பெற்றுள்ளது! 'ஸ்ரீமதி' என்றுதான் எந்தப் பெண்ணையும் அழைக்க வேண்டும் 'ஆண்கள்' என்பது இந்த நாரியர்களின் இன்றைய ஆசை! இதில் என்ன பிழை?

சித்தர் : 'இதுபற்றி நாங்கள் கருத்து வெளியிட அவசரப்படக்கூடாது; ஆங்கு அநுபவ முதிர்ச்சியிற் திளைத்த தாய்க்குலம் இருக்கிறதே! ஆதலால் அவர்கள கருதது வரட்டும்! ஆனல், பெண்கள் எங்கிருந்தாலும் தம் பண்டைய பாரம்பரியப் பண்பினையும் - பழைய வழக்கங்களையும 'பெண்மை' யெனும்பெருந்தக்க சாலபினையும் பேணுபவர்களாகவும் திகழ்ந்தால்- அது ஒன்றேபோதும்! இதனல், பேய்க்கோலங் கொண்டு திரிவோரும் திருந்துவர்? பின், எப்படி அழைத்தாற்ருன் என்ன? -பெயரில்?

இதற்கும் ஒரு இயக்கமா— நன்று; நன்று; மிக நன்று!

X X X

அது இருக்க, வேறென்ன உலகப் புதினங்கள்?

பக்தர் : "அமெரிக்காவில் 1750 தினசரிகளாம்! ; அப்படியென்றல், பாருங்களேன்"

சித்தர் : அப்படியானல் இவைகளுள் எத்தனை புதினசரிவுகளோ? தெரியவில்லை!

"நாயன்மார் - நாதன்"

'இல்லமென்றலை இருப்பகரச் சொன்னில் நிலமென்னும் நல்லாள் ...கும்

## ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவகுமார மௌன குரு சுவாமிகள் வரலாறு

(எமது சிதம்பரம் சிறப்பு நிருபர் திரு. மா. பாலசுப்பிரமணியன்)

( முன் வளர்ச்சி — 3 )

இப்படி இருக்க. ஜனனமான குழந்தை கண்விழிக்காமலும், பாலுண்ணமலும் அப்படியே இருந்து வாரணாடு வருவதைக்கண்டும், குழந்தையைப் பெற்ற தாயாருக்கும் சுத்தமாகப்பால் அமுதில்லாமலும் போயிற்று. இதனைக் கண்டு மிகுந்த துக்கமுற்று, குறிகள் கேட்டும் பூஜைகள் போட்டும். சோதிடங்களும் பார்த்தும் பயனில்லாமற் போயிற்று, பிரபலமான சோதிடரை அழைத்து வந்து குழநதை பிறந்த நாழிகைக் கணக்கைப் போட்டு பார்த்தனர், சோதிடர் குறிப்பைக் பைக் கவனித்துப் பார்த்து ஆனந்த பரவசமடைந்து இக் குழந்தை "சிவபெருமானின் திருவருளாற் பிறந்த குழந்தை உலகமே போற்றி வணங்கக் கூடிய முருகப் பெருமானின் அம்சமான தெய்வீகத் தன்மை வாய்ந்த குழந்தை" இது உங்களுக்குப் பிறக்கக் கூடிய தன்று' ஏதோ நீங்கள் முன்பு செய்த மா தவப்பயனற் பிறந்திருக்கிறது. ஆனல் "நீங்கள் வளர்த்து ஆனந்திக்கும் படியான தவத்தைச் செய்யவில்லை, ஆகவே வேறொரு தகுதிவாய்ந்த அன்னியர் இடந்தான் கொடுத்து அவர்கள் வீட்டில் வளர்க்கும்படி செய்ய வேண்டும்" அத்தகைய பெரும் புண்ணிய ஆத்மாக்கள் எங்குதான் இருக்கிருர்களோ! இதற்காக அவர்களும் பெரும் தவம் செய்திருக்க வேண்டும் என்ருர்,

குழந்தையைப் பெற்ற தாய் தந்தையர்கள் முன்பு திருப்பரங்குன்றத்தில் ஒரு இளஞ் சாதுவானவர் கூறிச் சென்றதையும ஞாபகப்படுத்தி பூரணமடைய ஒருத்தருப்பதாக அறிந்து ஒருவகையில ஆனந்தமுற்று அவ் விஷயத்தை எல்லோருக்கு தெரிவித்தனர். அப்பொழுது அவ்வூரில சைவ தனவைசிய குலததவரான வீரபத்திரன் செட்டியாரும அன்னரின் மனைவியார் சின்னம்மையார் என்பவரும் ஈசுவர பக்தியிலும் தரும குணத்திலும் சிறந்தவர்களாகவும், பலசரக்கு வியாபாரமும்- ஜவுளி வியாபாரம் முதலிய வியாபாரமும் செய்து கொண்டு சிறப்பாக வாழ்ந்து வந்தனர், இவர்களுக்குக் குழந்தைப்பேறு இல்லாத குறையால் சதாகாலமும் ஈசுவரனை துதித்துக் கொண்டும், வருத்தத்துடனும் இருந்து வந்தனர். (அச் செட்டியாரின மனைவியார் சின்னம்மையாருக்கு) இந்தக்குழந்தையைப் பார்பபதறகு அங்கு சென்றிருந்தனர். பிறந்துள்ள குழந்தையை கொடுத்துவிட வேண்டுமென்று தெரிவித்ததும் மிகுந்த ஆனந்தத்துடனும். ஆவலுடனும சின்னம்மையார் எழுந்து "எனனிடம் கொடுங்கள்" எனக்கும் குழநதையில்லை எங்கள் வீட்டிலும் எப்பொழும் பசுப் பாலும் இருக்கிறது. ஆனந்தமாக வளர்க்கின்றேன் என்று சொன்னவுடன் எல்லாரும் ஆனநதமுற்று நல்ல பொருத்தமான இடம என்று ஒப்புக்கொணடனர்.

ஏழாவது நாள் செய்ய வேண்டிய சடங்குகளைச்செய்து ஆனதும் குழந்தையைக் கொடுப்பதாக முடிவு செய்தனர். ஏழாவது நாள சடங்குகள் முடிந்த மறுநாள், குழந்தையை எடுத்து அம்மையாரிடம் கொடுத்தார்கள். இந்த அம்மையாரும் அளவிலாத பெரும் மகிழ்ச்சியோடு பெரும் கூட்டமாய்சூழ தனது இல்லம் கொண்டுவந்து அமர்த்தி எல்லோருக்கும் சந்தனம், பழம், சர்க்கரை, பலகாரங்களை அளித்தனர். அதன் பிறகு சிறிதுநேரம் சென்றதும் குழந்தையைப் பார்த்தபோது கண் விழித்து இருந்தது. முகத்திலே புன்னகை பூத்து எல்லோருடைய உள்ளத்தையும் கவர்ந்திருந்தது, பின்பு பசும்பாலை காய்ச்சிப் பாலாடையில் ஊற்றி மெதுவாக வாயில் வைத்தவுடன் ஆவலாக அருந்தியது. இதைக்கண்டு எல்லோரும் அளவிலா ஆனந்தமுற்று இனிக்குழந்தை நன்ருக இருக்கும் என்று சொல்லிக் கொண்டே சென்றனர்.

(வளரும்)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஈடு 492

அருணாசலம், நல்லதம்பி கைம்பெண் லட்சுமிப்பிள்ளை சுழிபுரம் கிழக்குச் சுழிபுரம் — வாதி

எதிராக

1. ஆசைப்பிள்ளை சுப்பையாவும் 2 பெண் நாகம்மாவும் இருவரும் சுழிபுரம் வடக்கு சுழிபுரம் — பிரதிவாதிகள

மல்லாகம் மாவட்ட நீதி மன்றத்தில் ஈடு 492 இலக்க வழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப் படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1977 -ம் ஆண்டு மாசி மாதம் 28ம் திகதி (28-2-77) மு ப. 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள நின்று பிரசிதத ஏலத்தில் என்னல் விற்கப்படும்,

தீர்வுத்தொகை ரூபா 4100 -ம் பின் 17 - 1 - 75 தொடக்கம் 21 - 5 - 76 வரைக்கும ரூபா 3000 -க்கு 10 % வட்டியும் பின் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 5 % வட்டியும் கோட்டுச் செலவு 732 - 75 இதில் ரூபா 2000 கொடுக்கப்பட்டது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு சங்கானை கோயில்பற்று சுழிபுரம் இறை "கொங்கய வயல்" பரப்பு செல்லு லாச்சம எட்டும குழி 7½ யும் கிணறும். எல்லை கிழக்கு ஆறுமுகம் அப்பாப்பிள்ளைக்குரிய காணி வடக்கு சுப்பையா கைம் பெண இலட்சுமிக்கும் மறுபேருக்கும உரிய காணிகள் மேற்கு ஆறுமுகம இரத்தினத்துக்குரிய காணி தெற்கு குமாரவேலு விசுவலிங்கததுக்கும் ஆறுமுகம கந்தையாவுக்கும உரிய காணிகள இதில் குறித்த கிணற்றில் இதன மேற்கு எல்லை காணிக்குரிய மூன்றிலொரு பங்கும் கிழக்கு தெற்கு பக்கமாக இறை வாய்க்கால் பாவிப்பு உருத்தும இன்னும் கிழக்கு எல்லை காணிக்குரிய 1/3 பங்கும் வழி வாய்க்கால பாவிப்பு உருததும புறணிகலாக இது அடங்கலும.

விதானை வளவு,
சிததன் கேணி,

சி. செ. மாரிமுத்து,
நீதி மன்றங்களின விற்பனவு ஆணையாளர்.

27-2-77 (112. 18 2-77)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B 797

தெல்லிப்பழை கொல்லன்கலட்டி

(1) சின்னத்தம்பி இலட்சுமணநாதனும் பெண்
(2) தங்கம்மாவும் — வழக்காளி

எதிராக

தெல்லிப்பழை கொல்லன்கலட்டி

(1) கதிர்காமன் சின்னத்துரையும் பெண்
(2) சிவக்கொழுந்துவும — எதிராளி

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டின் M B 797-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி, பின்னல விபரிக்கப்படும் துண்டுக் காணி 1977-ம் ஆண்டு பங்குனி மீ 2 உ புதன் கிழமை முற்பகல் 10-45 மணி தொடக்கம அந்தக் காணிக்குள நின்று பிரசித்த ஏலததில விற்கப்படும.

தீர்வைத்தொகை: முதல வட்டி ரூபா 11375/- ம் 24-7.75 தொடக்கம 28-11-75 வரைக்கும ரூபா 9640/-க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும இறுக்கும் வரை ,5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 520.85 சதம.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸதிறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழை கோவிற்பற்று தெல்லிப்பழை மேற்கிறை இராக்கலட்டி நிலப்பரப்பு 10 குளி 14 இந்தப் பரப்பு பத்து குளி பதினலும் கிணறும, வீடும, செற்பயிர்களும் எல்லை கிழக்கும் தெற்கும ஒழுங்கை, மேற்கு ரோட்டு, வடக்கு வயிரமுத்து கந்தையாவின் ஆதனம். இதில் குறித்த கிணற்றிலும் தூரவையிலும குளி ஆறிலும மூன்றிலிருபங்கும் மறுகாணிகளுக்குரிய வழிவாய்க்கால்உரித்தும புற நீங்கலாக மிகுதியடங்கலும்,

தொல்புரம்,
18-1-77

சி. சோ, நரசிங்கம் J, P.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும், மதிப்பாளரும்.

113. 18-2-77).

### நினைவுக்கு நீட்டோலை

யோகத்தின் முதல் வாசல் பேச்சை அடக்குதலும், உடைமையைத் துறத்தலும். ஆகும்.

X X X

சாற்றினல் மேகங் கூடுகின்றது மீண்டும் காற்றினலேயே கலைகிறது. மனத்தால் பந்தங்கள் கற்பிக்கப் படுகின்றன. மனதாலேயே மோட்சங் கற்பிக்கப்படுகின்றது.

— தவத்திரு, பூண்டிமகான் சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

உள்ளத்தினுள்ளே உளபல தீர்த்தங்கள்,
மெள்ளக் குடைந்துநின்று ஆடார்வினைகெடப்,
பள்ளமும் மேடும் பரந்துதிரிவர், இக்
கள்ளமனமுடைக் கல்வி இல்லோரே.

There are many sacred waters inside the heart. People do not excavate and bathe in them and shed their sins Ignorant people possessed of depraved hearts roam about the country (searching for sacred springs) in hills and dales.

Hindu Organ

Friday, February 18, 1977

## Dialogue — A Dignified Step

IT is an eleventh hour effort; nevertheless it has a significance. How far the talks between the Members of Parliament of the Tamil speaking areas and the Premier will extend in the direction of a decisive turn in the affairs of the Minorities of this country, we cannot with certainty indicate. Yet the present situation charged as it is with a feeling of seriousness must of necessity enable the participating legislators evolve a satisfactory scheme worthy of the cause.

What a difference it would have made had the Premier and her colleagues thought it prudent and profitable to respond to the repeated calls for a Round Table Conference made by leaders of non-political movements since the time of the boycott of the Constituent Assembly and the enactment of the New Constitution. And it cannot be denied that the prorogation of the Parliament just before the beginning of the unduly delayed talks on the problems of the Minorities has created undisguised feelings of misgivings in the minds of the people. However let us not waste time in discussing the missed opportunities. Let us hope for the best.

The fault is in us and in the stars. Now that Jupiter, the largest planet of the Solar system, has moved away from the house of Mars to that of Venus, sober judgment can be well expected.

## First Batch of Diploma Students in Hindu Civilization

The first batch of post-graduate students in Hindu Civilization have just completed their lectures this week. About 35 graduate teachers followed this course which had begun last year in the university of Sri Lanka, Jaffna Campus. They organized a get-together tea party with their professors and lecturers at the beginning of this week to mark the completion of their academic year. It is worthwhile to remember that the Jaffna Campus of the university of Sri Lanka was the first institution to organize such a course in Hindu Civilization not only in Sri Lanka but in the whole world. Further, classes for the new batch of students following the above course have already begun last week.

## Earthen Pipes Unearthed at Vathiry

Some earthen pipes probably belonging to the late medieval times have been found either in full form or in pieces in two of the gardens at Vathiry. Mr. S Krishnarajah a student specializing in History brought this to the notice of the lecturers in History and members of the Jaffna Archaeological Society. Accordingly, they went and surveyed the place last week. They hope to do a further intensive survey of the area. These pipes were probably used by the Dutch who were interested in the economic development of the Island for irrigation purposes or to carry water to some textile or some other factories closeby.

## Hindu Civilization Diploma Course— Social

The Union of the Post-Graduate Diploma Course in Hindu Civilization held a Social on Sunday, 6th February at the Jaffna Campus of the University of Sri Lanka (Thirunelvely site). A group photograph of those who attended the course-mainly teachers with the Lecturers was taken. Prof. K. Kailasapathy President of the Campus, Dr. K. Kailasanathakurukkal Dean of the Faculty of Humanities and Mr K. Lakshmana Iyer, M. A Director of Education (Ministry of Education, Colombo) were garlanded by three office-bearers of the Union.

At the end of the Social Mr. V. Umapathisivam, President of the Union referred to the aims of Sir P. Ramanathan, the founder of Parameshwara College now a home of the Jaffna Campus Mr. Lakshmana Iyer said that he was glad to see the wide, well distributed syllabus of the Diploma Course in Hindu civilization and expressed his wish that those who followed the course should be real ambassadors of the great civilization.

Mr. S. Thevathasan, Secretary of the Union thanked all those who had lectured to them during the course and promised that they would all try to give the benefit of their learning to others, particularly the younger generation.

Mr. S. R. Kumaresan, Treasurer of the Union commended the various qualities of the lecturers He specially thanked Mr K. Lakshmana Iyer who had been travelling all the way from Colombo to deliver the lectures. "Mr. Lakshmana Iyer's lectures", he said, 'were punctuated with interesting anecdotes which relieved the monotony of the serious subject."

## Dr. Ananda K. Coomaraswamy

The centenary of this great Hindu Savant and devotee and world citizen is occurring this year. It is appropriate that such an important event is duly celebrated. Though he was a Hindu, he belonged to the entire human race and to all communities and creeds.

It is desirable that early and adequate steps are taken in Jaffna also, among other places, to celebrate the event and to render honour to the revered memory of such a rare personality and at the same time rekindle in the minds of the present generation a love for some of the noble ideals for which Dr. Coomaraswamy stood and also serve as a source of guidance and inspiration to future generations.

S. SVASUBRAMANIAM
Life Member, Jaffna Saiva Paripalana Sabhai
and
Honorary Secretary, Council for National Unity and Welfare,
and Retired Attorney at-Law

## High Traditional Standard of the "Hindu Organ"

### MESSAGE

*From*

**Swami Pranavananda**
President
Divine Life Society, Malaysia

The 'Hindu Organ' and its counterpart in Tamil called 'Inthusathanam' published by the Jaffna Saiva Paripalana Sabhai are pioneer weeklies of Sri Lanka, established in 1889 From their inception, they had devoted themselves to the dissemination of cultural, religious and spiritual ideals of life and have also played a distinct role in representing the views of the people in educational reforms, political aspirations and maintenance of cultural traditions. Unlike modern newspapers which give prominence to sensational news that agitate man's mind, the Hindu Organ' and the 'Inthusathanam' have kept up a high traditional standard?

It is obvious that the growing gulf between the world of Science and that of Religion is causing great concern to all thinkers. Science has conquered space, it has also increased the distance between man and man. It has increased the material conforts of the outer man but has not touched the inner man. In these days of increased tension and restlessness and growing addiction to drug habit, the remedy lies in the practice of the ethical, moral and religio-spiritual ideals of life. One of the effective methods of propagating these ideals is through religious conferences. Such a World Hindu Conference was held in Madras in March, 1976 sponsored by the Sri Kanci Kamakoti Peetam and in the immediate presence of Jagadguru Sri Jayendra Saraswathi Swamigal. The result was the formation of the World Hindu Council, the first meeting of which was held in Kuala-Lumpur, Malaysia under the sponsorship of the Malaysia Hindu Sangam. Among the delegates from Sri Lanka was Sri R N. Sivapirakasam, the Editor in Chief of the 'Hindu Organ', whose matured views were will received at the Council. No doubt, the 'Hindu Organ' will give adequate publicity to the findings of this meeting for the benefit of all Hindus

In the true spirit of Hinduism which regards all religions as different paths leading to the same goal, the Kanci Kamakoti Pithadhipathi is now fostering a World Conference on Religion. Philosophy and Culture to be held at the ancient city of Madurai early in March, 1977, at which eminent scholars of thirteen World Religions are expected to participate. The positive aim of this Conference is 'to bring home to all men a consciousness of the ultimate and essential unity of all world religions! Such understanding of the fundamental bases of Religions will elevate men to be better men in their own religions and pave the way to a common brotherhood and greater peace and happiness among humanity as a whole. Let us pray for the glorious success of this Conference!

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday February 18, 1977.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org